**வேலணை பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 25 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வேலணை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | நடப்பாண்டில் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்ககளில் வெளிப்படுத்தப்படும். |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 15 மயானங்களின் பெறுமதியானது விலை மதிப்பிடப்பட்டு கடந்த 1 தொடக்கம் 6 ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மயானங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | சபையின் மயானங்கள் சபைக்குச் சொந்தமானது என கூறப்படுகின்ற போதிலும் அவை எமக்குச் சொந்தமானதற்கான ஆவணங்கள் இல்லை. ஆனாலும் சொத்துக்களை எமக்குச் சொந்தமாக்குவதற்கு பிரதேச செயலர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்பு பெறுமதி மதிப்பிடப்பட்டு சேர்க்கப்படும். |

**(இ) கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் இல்லாதிருந்தமை**

ரூபா 440,478 பெறுமதியான ஒரு கணக்கு விடயத்திற்குரியதாக எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள சான்று சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அதனைத் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| நிலையான வைப்பு (1158053) | 440,478 | நிலையான வைப்பு சான்றிதழ் | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு மீதியினை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட நிலையான வைப்பு தங்களுடையது தான் என்றும் அது தொடர்பான சான்றிதழ் அரசாங்க அதிபரிடம் இல்லையென்றும் கூறப்பட்டுள்ளது. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் உப பிரிவு 16 (2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்ட போதும் நிதிக்கூற்றுக்களில் இணைக்கப்படவில்லை. |
| (ஆ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 126 (iii) (ஊ) | வருமானப் பரிசோதகரினால் ரூபா 388,000 பெறுமதியான 44 அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக உரியவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி நிருவாக விதிகள் அத்தியாயம் III இன் பிரிவு 32 | சபையினால் வீதவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்படாததுடன் மீளாய்வாண்டில் வீதவரி அறவீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பிரதேசங்களை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்று நிருபம் 29 திசெம்பர் 2016 இன் 30/ 2016 ஆம் இலக்கம் | சபையின் 12 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இயந்திரப் பொறியியலாளருக்கு அறியத்தரப்பட்டுள்ளது. |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% விற்பனை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | விளம்பர நிலையங்களிடமிருந்தும் வங்கிகள் மற்றும் தரகு பெறப்படும் இடங்களிலிருந்தும் விற்பனை விபரங்கள் பெறப்பட்டு தரகு அறவிடப்பட வேண்டும். | வரி அறவிடுவதற்கு ஏதுவான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,294,873 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,196,073 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 446,800 | - | 3,162,733 | - | 663,800 | - | 970,400 | - |
| வாடகைகள் | 1,557,000 | - | 1,772,281 | 23,250 | 684,900 | - | 3,150,962 | 115,271 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 420,300 | - | 726,906 | - | 379,000 | - | 297,480 | - |
| ஏனைய வருமானம் | 50,637,770 | - | 41,449,160 | 8,525,189 | 45,988,590 | - | 35,912,708 | 14,186,143 |
| | **53,061,870** | **-** | **47,111,080** | **8,548,439** | **47,716,290** | **-** | **40,331,550** | **14,301,414** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 6,779,530 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும் பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த வேண்டும். | நடப்பாண்டில் பட்டியல்படுத்தப்படும். |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிறுதியில் கூட்டுமொத்தம் ரூபா 50,000 பெறுமதியான சபையின் எல்லைக்குட்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்களின் உரிமங்களும் நிர்மாணித்தல் கட்டணங்களும் அறவிடப்படாமல் நிலுவையாகவுள்ளது. | நிலுவையாகவுள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களின் உரிமங்களும் நிர்மாணித்தல் கட்டணங்களும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.2.4 முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 திசம்பர் 31 இல் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கென வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து | நிலுவையாகவுள்ள முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை | நிலுவைகள் நடப்பாண்டில் எமது சபைக்கு கிடைக்கவுள்ளது. |

ரூபா 8,525,189 கட்டணங்கள் தொகை பெறப்பட வேண்டியிருந்தது. | முத்திரைக் | எடுக்கப்பட வேண்டும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளுக்கிணங்க 30 செயற்பாடுகளிற்கும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். |

#### (ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைவதற்கு தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாராந்த சந்தை நிர்மாணித்தலுக்காக ரூபா 885,000 தொகையொன்று ஏற்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு அடைந்து கொள்ளப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை | வாராந்த சந்தையினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாராந்த சந்தையானது கடைத்தொகுதியாக மாற்றி வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

#### (இ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்பிக்க வேண்டிய திகதியில் 09 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் நாளதுவரை குறிப்பிட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடுகளினை உரிய காலத்தில் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட வேலைகள் தற்போது நடைபெறுகின்றன. |

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட காலம் மற்றும் குறுங்கால செயற்றிட்டங்களுக்கென மீளாய்வாண்டில் ரூபா 75,280 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் வருமானங்கள் எவையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருமானங்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மக்களிடமிருந்து கழிவகற்றுவதற்கு கட்டணம் பெறப்படுவதில்லை. |
| (ii) | திண்மக்கழிவு சேகரித்தலின் போது மூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படாது திறந்த வாகனங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவதால் வீதிகளில் பிரயாணம் செய்யும் பொது மக்களுக்கு சுகாதாரம் தொடர்பான பிரச்சினை காணப்படுவதுடன் அளவுக்கு அதிகமாக குப்பைகளை வாகனங்களில் வீதி வழியே குப்பைகள் கொட்டி செல்லப்படுகின்றது. | மூடிய வாகனங்களை பயன்படுத்தி சுகாதாரப் பிரச்சினைகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மருத்துவ பரிசோதனைகள் நடப்பாண்டில் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் |
| (iv) | வேலணை உப அலுவலகத்திற்கும், அல்லைப்பிட்டி உப அலுவலகத்திற்கும் உட்பட்ட பிரதேசத்தில் திண்மக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு அராலி திண்மக்கழிவுகள் சேகரிக்கப்படும் இடத்தில் குவிக்கப்படுகின்றதே தவிர தேசிய கொள்கைகளின்படி தரம் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவுகள் தேசிய கொள்கைகளின்படி தரம் பிரிக்கப்பட வேண்டும். | திண்மக்கழிவை தரம் பிரிப்பதற்கு ஆளணியினர் போதாமையினால் தரம் பிரித்தல் செயற்பாடு நடைபெறுவதில்லை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையானது பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக | மக்களுக்கு உரிய காலத்தில் சேவைகள் | வேறு நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் அறிக்கைகளின் காலதாமதமே இதற்கான |

| | | |
|---|---|---|
| மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தன. | வழங்கப்பட வேண்டும். | காரணமாகும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 20மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு சமனான பதவியினர் நியமிக்கப்பட வேண்டும். | பதவி வெற்றிடங்கள் இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | தாமாகவே பதவி விலகிய அலுவலரிடமிருந்து அறவிட வேண்டிய இடர்கடன் ரூபா 35,295 கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | இடர் கடன் நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியரின் ஓய்வூதிய கொடுப்பனவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய 5 உப அலுவலகங்களின் மூலம் இவ் உப அலுவலகங்களில் 6183 ஆதனங்களிற்கு வீதவரி அறவிடுவதற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதே தவிர அறவீடுகளை மேற்கொள்வதற்கான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வீதவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பிரதேசங்களை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் பல அபிவிருத்தித் திட்ட வேலைகள் நிறைவேற்றாது ரூபா 29,630,320 பெறுமதியான நிதியினை வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிட்டுள்ளது. | நிலையான வைப்புக்கள் உரிய தேவைக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். | நிலையான வைப்பின் நோக்கங்கள் குறிப்பிடப்படவில்லை. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத்தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சில்லறைக் கடனாளிகள் கணக்கில் NPLG – 8951 இலக்க பிக்கப் திருத்தத்திற்காக ரூபா 665,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும் நாளதுவரை திருத்தங்கள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட வாகனம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. குறித்த செலவினம் சில்லறைக் கடனாளிகள் கணக்கிலிருந்து மீளப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 15,411,000 பெறுமதியான 19 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை மாற்ற வேண்டும். | நீண்டகாலம் புத்தகம் இல்லாத காரணத்தினால் தற்போது பொலிஸ் அறிக்கை பெறுவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. |

### 3.5.3 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நயினாதீவு உப அலுவலகப் பிரதேசத்தில் உடற்பயிற்சி நிலையம் நடாத்துவதற்காக பல்வேறு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதும், அவை ஒரு வருடத்திற்கு மேலாக பாவனைக்கு உட்படுத்தப்படாதுள்ளது. | உடற்பயிற்சி நிலையத்தினை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பயிற்சியாளரினைப் பெற்று இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

### 3.5.4 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புங்குடுதீவு உப அலுவலகத்தில் 03 புத்தகங்களும் நயினாதீவு உப அலுவலகத்தில் 111 புத்தகங்களும் அல்லைப்பிட்டி உப அலுவலகத்தில் 26 புத்தகங்களும் வருடாந்த பொருள் மெய்மையாய்வின்போது பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட்ட அனைத்து பற்றுச்சீட்டுக்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பார்வைக்குச் சமர்ப்பிக்கப்படாத புத்தகங்களின் பெறுமதி பொறுப்பான ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது. |

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமானது பிரதேச சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் சேவைகளுக்கான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் உரிய மாதிரிக்கமைய வழங்கல்கள் மற்றும் சேவைகள் உட்படதயாரிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்கான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆளுக்குரிய வரும்படிகள், வழங்கு பொருட்களும் தேவைப்பாடுகள் மற்றும் மூலதன சொத்துக்கள் பழுது பார்த்தலின் பாதீட்டு செலவீனத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையே அதிகளவான வேறுபாடு காணப்படுவதுடன் இது செலவின பாதீட்டின் குறைபாடாகக் காணப்படுகின்றது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. |